# பெண்ணியப் பார்வையில் "ஜனனம்"

*முனைவர் இ. சகாய மேரி*
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
ராணி அண்ணா மகளிர் கல்லூரி. திருநெல்வேலி

மலர்: 11
சிறப்பிதழ்: 1
மாதம்: ஏப்ரல்
வருடம்: 2024
P-ISSN: 2321-788X
E-ISSN: 2582-0397
DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7906

*பெண்மை காலங்காலமாக தமிழிலக்கியங்களில் போற்றப் பெற்று வருகின்றன. மகளிரை அழகுடையவர்கள் என வர்ணனைப்படுத்துவதுடன் தமிழிலக்கியங்கள் நின்றுவிடவில்லை. சங்க அகஇலக்கியங்களில் அவர்களின் நுண்ணிய உணர்வலைகள் பதிவாகியுள்ளன. சில நேரங்களில் அவற்றில் சில கற்பனையில் வெளிப்பட்டது எனலாம். எனினும் தமிழிலக்கியங்களில் பெண்மை பேணப்படுவதைப் படிப்பவர்கள் உணருவர். தம் உரிமைகளை நிலைநாட்டுதல். மனக்கருத்துகளை வெளிப்படுத்துதல் போன்றவற்றைப் பெண்ணியத்தின் கூறுகளாக இன்றைய திறனாய்வாளர்கள் குறிப்பர். அவ்வகையில் வாஸந்தியின் "ஜனனம்" நாவல் பெண்ணிய நோக்கில் இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது. பெண்ணியம் பெண்கள் ஒவ்வொருவரும் தன்னிலைஉணர்ந்தநிலையில்தோன்றியதுபெண்ணியம். தெற்காசிய நாடுகள் பெண்ணியத்திற்குப் "பெண்கள் சமூகத்திலும் அலுவலகங்களிலும் வீட்டினுள்ளேயும் நசுக்கப்படுவதைப் பற்றிய விழிப்புணர்ச்சியும் அந்நிலையை மாற்றியமைக்க ஆண்களும் பெண்களும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படும் முயற்சிகளும்1 என்று விளக்கம் தருகின்றன. பெண்ணியச் சிந்தனைகளை ஒரு சேரக் காணும் போது இருபெரும் நோக்கங்களே அடிப்படையாக விளங்குவது புலனாகிறது. ஒன்று பொருளாதாரத் தனித்துவம் இன்றிக் கற்பு ஒன்றினுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பெண்கள் அடக்கப்படுவதனையும் ஒடுக்கப்படுவதனையும் தடுப்பதாகும். மற்றொன்று பெண்ணுக்கு ஆணைப் போல எல்லாத்துறைகளிலும் உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதும் ஆகும். இன்றைய படைப்பிலக்கியங்கள் பெண்கள் ஆணுக்கு நிகரான சமூகமதிப்பைப் பெறுவதற்கும் பெண்ணுரிமை மறுதலிப்புகளைத் தடுப்பதனையும் அடிப்படையாகக் கொண்டு சித்தரிக்கப்படுகின்றன.*

*இவ்வகையில் வாஸந்தியின் "ஜனனம்? நாவல் ஆராயப்படுகின்றது. ஜனனம் அமெரிக்காவிலிருக்கும் கணவனோடு குடியேறப்போகும் பள்ளி ஆசிரியை உமா அமெரிக்கா செல்லும் முன் தென்னாட்டுக் கோயில்களைத் தரிசிக்கச் சுற்றுலா செல்கின்றாள். பஸ் விபத்துக்குள்ளாகி அவள் மட்டும் மூளைக் காயத்தோடு தப்பிப் பிழைக்கின்றாள்.*

அவளுக்குச் சிகிச்சை அளித்த டாக்டர். ஆனந்த் "இதெல்லாம் அபூர்வமான கேஸ் தான். படிச்சது கத்துண்டது இதெல்லாம் ஞாபகம் இருக்கும். பழக்கவழக்கங்கள் கூட மாறாது ஆனா தான் யாரு எங்கேயிருந்து வந்தோம் என்கிறது மறந்து போகும்" என்று அவளது நிலையைத் தெளிவாக விளக்கியபோது அதிர்ந்து போகிறாள். டாக்டர் அவளுக்கு "லாவண்யா? என்று பெயர் சூட்டி அவளுக்குத் தான் கற்றது நினைவிருப்பதால் அவ்வுர் பள்ளியில் ஆசிரியை வேலையும் வாங்கித் தருகிறார். நான்கு மாதங்களாகியும் யாரும் அவளைத் தேடி வராததால் அவளைத் திருமணம் செய்யவும் முன் வருகிறார். இந்தக் கால கட்டத்தில் அவளது கணவன் ரகுபதி செய்தியறிந்து தேடி வருகிறார். கணவனை அடையாளம் கண்டு கொள்ளாத உமா டாக்டரின் நண்பராக நினைத்துக் கொண்டு "மிஸ்டர் ரகுபதி? என்று மூன்றாம் மனு" போல் அழைக்கின்றாள். தன்னை விபத்திலே தப்பிப் பிழைத்த "இறந்தகாலம் என்கிற லேபிலே இல்லாதவ?[2] என்று அறிமுகப்படுத்துகிறாள்.

தன்னை யாரும் இதுவரை தேடி வரவில்லை என்றும் "என்னைத் தேடிண்டு இப்ப யாருமே வரவேண்டாம்னு தோன்றது... இனிமே யாராவது வந்து பழசைக் கிளறினா அதுதான் எனக்குச் சம்பந்தமில்லாத மாதிரி இருக்கும். அதிர்ச்சியாகக்கூட இருக்கும்"[3] என்கிறாள். அவளது பேச்சு ரகுபதிக்கு வார்த்தையே வராத அதிர்ச்சியைக் கொடுத்தது. தனக்கும் அவருக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்பதுபோல் அவள் பேசியது அவரது பார்வையையும் மனசையும் மூடியது. அதோடு தன் முன்னிலையிலேயே முகத்தில் செம்மையும் கண்களில் மையலுமாக நிற்கும் அவள் நிலையைக் கண்டு அவளைத் தன்னுடன் அழைத்துச் செல்லவேண்டும் என்று எண்ணத்தை மாற்றிக் கொள்கிறார். பின் டாக்டரை நோக்கி "இவள் என் மனைவி இல்லை... என் மனைவி திரும்பி வரமுடியாத தூரத்துக்குப் போயிட்டாள்னு நினைக்கிறேன்? என்று பதில் கூறுகின்றார். இரண்டு ஆண்டு தாம்பத்திய வாழ்க்கை நினைவில்லாமல் புதுப்பெண்ணாய் டாக்டரோடு நிற்கும் மனைவிக்கும் டாக்டருக்கும் திருமண வாழ்த்தினைக் கூறிவிட்டுத் திரும்புகிறார்.

### பெண்மை போற்றப்படல்

பெண்ணுரிமைகளில் தலையாயது பெண்ணின் மனஉணர்வு ஆடவர்களால் போற்றப்படல் வேண்டும் என்பதாகும். இந்த நாவலில் கணவரை அறிந்து கொள்ளாமல்

**"நீங்களும் டாக்டரா?,**

**"நீங்கள் அகமதாபாத்தில் என்ன பண்றீங்க??**

என்றெல்லாம் கேள்வி கேட்டபோது ரகுபதிக்கு இவள் மண்டையை உடைத்தால் என்ன என்ற ஆத்திரம் வருகிறது. ஆனால் அவளோடு கழித்த நாட்கள் நினைவுக்கு வர" இவள் அந்நியமாகிப் போனவள்... இவளுடைய புருசுன் நான் என்று இவளுக்குப் புரிகிறவரை நான் என் உணர்ச்சிகளைக் காட்ட முடியாது. அந்த அளவிற்கு ஒரு நாகரிகம் அவசியம்[4] என்று கட்டுப்படுத்திக் கொண்டார். ஆனால் உமாவின் "எனக்கு எதுவுமே புரியவில்லை. புதுசா பிறவி எடுத்த மாதிரி இருக்கு, எல்லாம் புதுசா இருக்கு - மறுபடியும் ஜனனம் ஏற்பட்ட மாதிரி" என்ற மனச்சிக்கல் வெளிப்பாடு அவரைச் சிந்திக்க வைத்தது. அதனால் நினைவிழந்த மனைவியிடமும் டாக்டரிடமும் மாலையும் கழுத்துமாய்த் தாங்கள் இருவரும் எடுத்த புகைப்படத்தைக் காட்டிச் சலனப்படுத்தவில்லை.

"இவள் என் மனைவி எனக்குத்தான் சொந்தம்? என்று நிரூபிக்கவில்லை. மனைவியைத் தன்னுடன் வருவதைத் தவிர வழியில்லை என்று வாதாடவில்லை. தன் மனைவி. டாக்டர் இருவர்தம் மன உணர்வைப்

புரிந்தவராய்"நான்கு மாதங்களாக உமாவை இழந்துவிட்டேன் என்கிற உணர்வுக்கு என்னை நான் பழக்கப்படுத்திக் கொண்டேன்... இப்பொபுது அவள் லாவண்யாவாக ஏற்றிருப்பது ஒரு புதிய ஜனனம். பழைய வாழ்வின் நிழலே இல்லாத மறுபிறப்பு அதில் குறுக்கிட எனக்கு உரிமை இல்லை..."[5] என்று விட்டுக் கொடுத்தது பெண்ணுரிமை பேணுதல் ஆகும்.

எண்ணங்களால் செத்துப் போய்விட்டவளை "என்மனைவி? என்று உரிமை பாராட்டாது விட்டுக் கொடுத்த ரகுபதியின் முழவு உயர்வானது தானாக வந்தது. இது மாறிவரும்சமுதாயத்தின்பிரதிபலிப்பாகும். பெண்ணுக்கு ஆணைப்போல முடிவெடுக்கும் உரிமை வேண்டும் என்ற பெண்ணுரிமைச் சிந்தனையின் வெளிப்பாடாகும். "திடுதிப்பென்று அவள் எதிரில் போய் நின்றால் எப்படியிருக்கும்"...[6] என்றெல்லாம் சிந்தித்துச் சென்றவர் வேறு ஒருவனுக்கு மனதைப் பறிகொடுத்த மனைவியைக் கண்ட அவளது மகிழ்ச்சியைக் கலைக்க விரும்பாத ரகுபதியின் செயல் ஆடவர்கள் பெண்மையைப் போற்ற வேண்டும் என்ற பெண்ணியச் சிந்தனை வற்புறுத்தலாகும். தன்னுடைய மனைவி என்று புகைப்படத்தைக் காட்டி டாக்டரின் மனதை வருத்தாதது ரகுபதியின் தியாக உணர்வு. இத்தகு இக்கட்டான சூழ்நிலையில் ஆடவர் மேற்கொள்ள வேண்டியதனையே படைப்பாளி அறிவுறுத்துகிறார். விபத்தில் மனைவியின் கழுத்தில் உள்ள தாலி என்ற புனித அடையாளம் காணாமல் போனதால் ஏற்பட்ட தவறு என்று ரகுபதி தன்னைத் தேற்றிக் கொள்வது படைப்பாளியின் மரபியல் வழுவாத பெண்ணியச் சிந்தனையாகும்.

## கற்பென்னும் மதிப்பு

"கற்பு? என்னும் மதிப்பு காலந்தோறும் பல நிலைகளில் வழக்காறு பெற்றுள்ளது தொடக்கக்காலம் முதல் கற்புநெறி பெண்ணுக்கு மட்டுமெ கற்பிக்கப்பட்டது. கற்பைப் பெண்ணுக்குக் கட்டாயமாக்கியவன் அப்பெண்ணின் கற்பைக் காக்கும் பொறுப்பையும் அவனே ஏற்கத் தொடங்கினான். பொன்னைப் போல, மணியைப்போல பெண்ணையும் பாதுகாப்பிற்குரிய பொருளாக்கினான். "பெண் என்பவள் வேள்விக்காக வைக்கப் பெறும் தயிர்ப் பாத்திரத்தைப் போன்றவள். அவளைக் கவனமாக வைத்துக் கொள்ள வேண்டும்"[7] என்று தரும சாத்திரம் கூறுகிறது. இளங்கோ நெறிதவறிய பெண்டிரைக் குற்றம் செய்பவர்களைப் புடைத்துண்ணும் புதம்கொன்றுவிடும் என்றார். இத்தகைய கற்பு என்னும் மதிப்பு இந்த நாவலில் புதிய தோற்றம் பெற்றுள்ளது.

சங்க இலக்கியத்தில் "வடமீன் புரையும் கற்பின் மடமொழி அரிவை தோளல்லது? என்னும் பாடலில் மலையமான் திருமுழக்காரியிடம் கபிலர் "உன் நாடு அந்தணருக்கு உரியது: உனக்குரியது ஒன்று உண்டென்றால் அது உன்னுடைய மனைவியே ஆவாள்" என்று கூறுகின்றார். இத்தகைய உடைமைப் பொருளாகிய மனைவியைக் கணவன் ரகுபதி அவளின் நினைவற்ற நிலையையும் அதனால் ஏற்பட்ட புதிய காதலையும் மதித்துப் "பிறருக்கு ஈத்தல்? என்னும் இப்படைப்பின் வெளிப்பாடு சமுதாய மாற்றத்தின் புது வடிவம் எனலாம்.

இன்று பெண்கள் கல்வி வளர்ச்சி பொருளாதாரத் தனித்துவம் பெற்ற நிலையில் அவர்தம் உரிமைகள், எண்ணங்கள், சிந்தனைகள் உணர்வுகள் மதிக்கப்படுகின்றன. பொதுவாக மனித வாழ்வின் தேவைகளும் நடைமுறைகளும் மனித அறிவின் மீது தாக்கம் செலுத்துகின்றன. நடைமுறைத் தேவைகளே மதிப்புக்களை நிர்ணயிக்கின்றன. இக்கருத்தை எஸ்.ஏ.டாங்கே முதலியோர் "புறநிலைக் காரணிகளால் தான் மதிப்பு மாற்றங்கள் உண்டாகின்றனவே தவிர, யாரோ சிலரது சிந்தனைகளின் வாயிலாக அவை உருவாவதில்லை. புறநிலை மாற்றத்

தின் காரணமாக மாற்றத்தின் அவசியம் மனித மூளைகளால் உணரப்படுகின்றது8 என்னும் கூற்று வலியுறுத்துகிறது. ஒருகால கட்டத்துத் தேவைகள், இன்னொரு கால கட்டத்துத் தேவைகளை நிறைவு செய்யாத போது புதிய மதிப்புக்கள் தோன்றுவது இயல்பு. அதுவெ படைப்பாளியால் வெளிப்படுத்தப்படுகின்றது. இதனையே தி.சு. நடராசன் "சமுதாய மாற்றம் என்பது இலக்கியத்தைப் பொறுத்த அளவில் படைப்பாளனுடைய சமுதாய உணர்வினையும் உலகக் கண்ணோட்டத்தினையும் பொறுத்தே அமைகின்றது என்று கூறுகின்றார்"[9].

## முடிவுகள்

பெண்களின் ஒழுகலாறு பற்றியும் ஆண்பெண் உறவு பற்றியும் இம்மண்ணில் வேரூன்றிப் போன மதிப்புக்கள் மாறிக் கொண்டிருக்கின்றன என்பது புலனாகிறது.

"மதிப்புக்கள் கருத்துக்கள் மட்டுமல்ல, உணர்வுநிலைகளையும் உள்ளடக்கியவை. அவற்றை நிலை நிறுத்துவதற்காகப் போராடவும் தியாகம் செய்யவும் அவற்றைப் பேணுநர் முன் வருவர்" என்ற சமூகவியலார் கருத்தும் வலியுறுத்தப்படுகிறது.

## அடிக்குறிப்புகள்

1. க.முத்துசிதம்பரம், பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும், பக்.10
2. வாஸந்தி, ஜனனம். பக்.133
3. மேலது, பக்.134
4. மேலது, பக்.130
5. மேலது, பக்.139
6. மேலது, பக்.123
7. மு.சுபலெக்சுமி, பெண், பக்.41
8. மகாத்மா ஒரு மார்க்சிய மதிப்பீடு. பக்.17
9. நடராசன், தி.சு., திறனாய்வுக்கலை, பக்.63